**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 200/2021**

நாள் 25.03.2026

DW 4 – சுரேஷ்

த/பெ – சண்முகம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of March 2026)**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். வாதிகள் காலம்சென்ற ராமசாமியின் பெண்மக்கள் என்றால் சரிதான். அந்த ராமசாமிக்கு சாமிநாதன் என்ற மகனும் இருந்து இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். அந்த சாமிநாதனின் வாரிசுகள்தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதிகள் இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டர் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட சொத்தை பொறுத்து உயில்சாசனம் எழுதி வைத்தார் என்று எனக்கு தெரியாது. அந்த பி.வா.சா.ஆ 1 உயில் சாசனம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றும், அதில் என்ன ஷரத்துக்கள் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் ஏற்பட்டபோது நான் உடன் இருக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் கையெழுத்து அடங்கிய வேறு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் கையெழுத்து அடங்கிய வேறு ஆவணங்கள் சமர்ப்பிக்காத நிலையில் உயில் சாசனத்தில்

எனது அப்பாவின் கையெழுத்து இருப்பதாக சொல்லி அளித்த எனது வாய்மொழி சாட்சியம் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.25 19:00:31 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**